## அரசுத் தேர்வுகள் இயக்ககம் சென்னை –600 006,

**மார்ச் / ஏப்ரல் 2020 இடைநிலை / மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான தேர்வுக்கால நேரம் மாற்றம் குறித்த செய்திக்குறிப்பு**

நடைபெறவுள்ள மார்ச் / ஏப்ரல் 2020 இடைநிலை / மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரணடாம் ஆண்டு பொதுத்தேர்வுகளுக்கு ஏற்கனவே வெளியிடப்பட்ட கால அட்டவணையில் தேர்வுக்கால நேரம் 2 1/2 மணி நேரம் என அறிவிக்கப்பட்டிருந்தது.

தேர்வு எழுதும் நேரத்தினை 2 1/2 மணி நேரத்திலிருந்து 3.00 மணி நேரமாக அதிகரிக்கக் கோரி தேர்வர்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டதைத் தொடர்ந்தும் மற்றும் புதிய பாடத்திட்டத்தில் தேர்வெழுத வேண்டியுள்ளதாலும் தேர்வர்களின் நலன் கருதி மார்ச் / ஏப்ரல் 2020 இடைநிலை, மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு தேர்வுகளுக்கு தேர்வு எழுதும் நேரம் 3.00 மணி நேரமாக அதிகரிக்கப்படும் என அறிவிக்கப்படுகிறது. மேலும், பழைய பாடத்திட்டத்தில் தேர்வெழுதும் தேர்வர்களுக்கும் தேர்வெழுதும் நேரம் 3.00 மணிநேரம் எனவும் அறிவிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| Reading of Question paper | 10.00 AM to 10.10.AM | 10 Minutes |
| Verification of Particulars by the Candidates | 10.10.AM to 10.15 AM | 5 Minutes |
| Duration of Examination | 10.15 AM to 1.15 PM. | 3 Hours |

**ஒம்./–**
**இயக்குநர்**

**இடம்: சென்னை–6.**
**நாள்: 22.10.2019.**